# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 49 | 4 Pages | 19.09.2023 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 49 | 4 பக்கங்கள் | 19.09.2023 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## சீனாவின் அதிநவீன உளவு கப்பல் 23ந்தேதி இலங்கை வருகிறது: தமிழகத்தின் தென் பகுதியை மிக எளிதாக கண்காணிக்கும் அபாயம்



புதுடெல்லி, செப். 19

சீனாவின் உளவு கப்பலான ஷி யான்6 வருகிற 23ந்தேதி இலங்கைக்கு வர உள்ளது. இந்த கப்பல் இலங்கையின் கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை ஆழ்கடல் துறைமுகங்களில் நிறுத்தப்பட உள்ளதாக கூறப்படுகிறது. 3,999 டன் எடை கொண்ட இந்த கப்பல் குவாங்சோவில் உருவானது. தற்போது தென் சீனக் கடலுக்குள் தெற்கு திசையில் பயணிக்கும் இந்த உளவுக் கப்பல் மலாக்கா கடல் பகுதி வழியாக இலங்கையை அடைகிறது. இலங்கை பொருளாதார மண்டலம் மற்றும் தெற்கு இந்தியப் பெருங்கடலின் பகுதியை ஆய்வு செய்வதற்காக இந்த கப்பல் வருவதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. இந்த கப்பலில் 20 அதி நவீன அறிவியல் ஆய்வு கருவிகள் உள்ளன. 13 ஆய்வு குழுவினர் இதில் இடம்பெற்று உள்ளார்கள். இந்த கப்பல் 17 நாட்கள் முகாமிட்டு இலங்கை கடற் பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்ள உள்ளதாகவும் இலங்கை கடற்படை உறுதிப்படுத்தி உள்ளது. இந்த கப்பல் மொத்தம் 1115 டன் எடை, 129 மீட்டர் நீளம் மற்றும் 17 மீட்டர் அகலம் கொண்டது. இந்தியப் பெருங்கடல் பகுதியை சுற்றி வளைக்கும் நோக்கத்துடன் செயல்படும் சீனா அதற்கு தளமாக இலங்கையை பயன்படுத்தி வருகிறது. இலங்கைக்கு பொருளாதார மற்றும் உள்கட்டமைப்பு திட்டங்களில் உதவுவது போல துறைமுகங்கள் மற்றும் கடற்படை தளங்களை நோக்கி கவனம் செலுத்தி வருகிறது. சீனாவின் உளவு மற்றும் போர்க் கப்பல்களின் மூலம் 750 கி. மீ. தூரம் வரையிலான இடங்களைக் கண்காணிக்க முடியும். அதன்படி, இலங்கைக்கு மிக அண்மையில் உள்ள இந்தியாவின் ஸ்ரீஹரி கோட்டா ராக்கெட் ஏவுதளம், கல்பாக்கம் அணுமின் நிலையம், கூடங்குளம் அணுமின் நிலையம் மற்றும் இந்தியாவின் தென் மாநிலங்களில் அமைந்திருக்கும் 6 கடற்படைத் தளங்களை இந்தக் கப்பல் மூலம் உளவு பார்க்க வாய்ப்பு உள்ளது. இதனால், சீன கப்பல்களின் வருகைக்கு இந்தியா கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. எதிர்ப்பை மீறி இலங்கை சீன கப்பலுக்கு அனுமதி அளித்துள்ளது. அதிநவீன ஆய்வக கட்டமைப்பு மற்றும் கண்காணிப்பு வசதிகளை கொண்ட இந்த கப்பலின் செயல்பாடுகள் இலங்கை கடற்பரப்பில் முன்னெடுக்கும் பட்சத்தில் அது இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவே அமையும். எனவே இந்திய பெருங்கடலுக்குள் ஷி யான் 6 கப்பலை அனு மதிக்க வேண்டாம் என்று மத்திய அரசு இலங்கையை வற்புறுத்தி உள்ளது. சீனாவின் ராணுவக் கப்பல்களுக்கு இலங்கை இடம் கொடுப்பது இது முதல் முறையல்ல. கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் பாலிஸ்டிக் ஏவுகணைகளைக் கண்காணிப்பதில் பெயர் பெற்ற சீனக் கப்பலான யுவான் வாங்5 அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிறுத்தப்பட்டது. மற்றொரு உளவு கப்பல் ஏற்கனவே கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 20ந் தேதி இலங்கைக்கு வருகைதந்ததோடு 10 நாட்கள் இலங்கை கடற்பரப்பில் முகாமிட்டிருந்தது. சீனாவின் போர்க்கப்பலான ஹை யாங் 24 சில வாரங்களுக்கு முன்னர் 138 மாலுமிகளுடன் கொழும்பு துறைமுகத்தில் தங்கியிருந்தது. இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கே பிரதமராக இருந்த காலத்தில், சீனாவின் பெய்ஜிங் கடனாகக் கொடுத்த தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்காக, அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட குத்தகைக்கு சீனாவிடம் ஒப்படைத்திருந்தார். இலங்கைக்கு அதிக கடன் வழங்கியுள்ள நாடாக சீனா உள்ளது. அது போல இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இந்தியா 3.5 பில்லியன் டாலர் கடனை வழங்கி உள்ளதுடன் எரிபொருள், மருந்துகள், அரிசி, பால் பவுடர் மற்றும் உணவுப் பொருட்களையும் கொடுத்து உதவி உள்ளது. எனினும், இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சு றுத்தலை ஏற்படுத்தும் வகையில் அடுத்தடுத்து சீன உளவு கப்பல்களுக்கு இலங்கை அரசு அனுமதி வழங்கி வருகிறது. இதனால் இலங்கை இந்தியாவுடனான உறவில் பாதிப்பை ஏற்படுத்துமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

## நிகழ்ச்சி நிரல் முழுவதும் இந்தியில் மட்டுமா..?: கோதிப்புடன் கிழித்தெறிந்த திருச்சி சிவா



டெல்லி, செப். 19

இந்திய பாராளுமன்றத்தின் 5நாள் சிறப்பு கூட்டத்தொடர் இன்று தொடங்கியது. அவை நிகழ்ச்சிகள் குறித்து ஆலோசிக்கவும், அனைத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்பை கோரவும், ஆளும் பா.ஜ.க.வால் நேற்று ஒருஅனைத்துகட்சிகூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இக்கூட்டத்திற்கு பாதுகாப்பு அமைச்சர்ராஜ்நாத்சிங்தலைமை வகித்தார்.இதனையொட்டி,காலைபாராளுமன்றத்தின்புதியகட்டிடத்தில் "கஜ துவார்" பகுதியில் கொடியேற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதற்கு குடியரசு துணைத்தலைவர் ஜக்தீப் தங்கர் தலைமை வகித்தார். மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா உட்பட பல பாராளுமன்ற உறுப்பினர்கள் இதில் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாட்டின் தி.மு.க.வை சேர்ந்த மாநிலங்களவைஉறுப்பினர்திருச்சிசிவாகலந்துகொண்டார்.தி.மு.க.வின் சார்பில் மாநிலங்களவைக்கு 4வது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் உறுப்பினர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. சிவா கொடியேற்றும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட போது நிகழ்ச்சி நிரல் அவருக்கு வழங்கப்பட்டது. அதில் உள்ளடக்கம் முழுவதும் இந்தியிலேயே இருந்தது. இதனை எதிர்த்த சிவா, இந்நிகழ்ச்சி நிரலை கிழித்து எறிந்துவிட்டார். அவரை போலவே பல எதிர்கட்சி தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து, ராஜ்நாத் சிங், எதிர்காலத்தில் ஆங்கிலத்திலும் உள்ளடக்கம் இடம் பெறும் என உத்தரவாதம் அளித்தார். பாராளுமன்றம் கூட்டப்பட்டிருப்பதன் அவசியம் குறித்து பேசிய திருச்சி சிவா, "பா.ஜ.க.வினர் எதையோ மறைக்கிறார்கள் என்றே தோன்றுகிறது. அது என்னவென்று தெரிய வேண்டும். அரசியல் கட்சிகளும், பாராளுமன்ற உறுப்பினர்களும் என்ன நடக்கிறது என தெரியாமல் இருந்த சூழ்நிலை இதற்கு முன் என் அரசியல் வாழ்வில் நான் பார்த்ததில்லை, என தெரிவித்தார்.

# மக்கள் குறைதீர் கூட்டம் 26ந்தேதி நடக்கிறது

திருப்பூர், செப். 19

4 மணிக்கு மக்கள் குறைதீர்க்கும் நாள் நடத்தப்படுகிறது. அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் விஜயதனசேகர் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வருகிற 26ந் தேதி மாலை 4 மணிக்கு மக்கள் குறைதீர்க்கும் நாள் நடத்தப்படுகிறது.பொதுமக்கள்தங்கள்யோசனை, புகார்களை ஏ.விஜயதனசேகர், அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர், திருப்பூர் கோட்டம், திருப்பூர் 641601 என்ற முகவரிக்கு கடிதத்தை அனுப்பி வைக்க வேண்டும். கடிதத்தின் மீது DAK ADALAT CASE என்று தவறாமல் குறிப்பிட்டு இருக்க வேண்டும். வருகிற 20ந் தேதிக்குள் கடிதம் அனுப்பி வைக்கலாம் என்று திருப்பூர் அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் விஜயதனசேகர் தெரிவித்துள்ளார்.



# மாணவர்கள் விளையாடுவதற்கு நேரத்தை ஒதுக்க வேண்டும்: மாவட்ட விளையாட்டு அலுவலர் அறிவுறுத்தல்

திருப்பூர், செப். 19

நாட்டு நலப்பணித் திட்ட அலகு 2 சார்பில் மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் கடந்த 2 நாள்களாக நடைபெற்றன. தவறான பாதையில் செல்வதை தடுப்பதற்கும் விளையாட்டு பெரும் உதவியாக இருக்கும்

நாட்டு நலப்பணித் திட்ட தினவருகிற 24ந் தேதி கொண்டாடப்படுவதை முன்னிட்டு திருப்பூர் சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட அலகு 2 சார்பில் மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் கடந்த 2 நாள்களாக நடைபெற்றன. இதன்நிறைவு விழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு நாட்டு நலப்பணித்திட்ட அலகு 2 ஒருங்கிணைப்பாளர் மோகன்குமார் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் கிருஷ்ணன் தலைமை வகித்தார். இதில், சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற மாவட்ட விளையாட்டு அலுவலர் ராஜகோபால் பேசியதாவது: மாணவர்கள் சமூக வலைதளங்களில் ஈடுபடுவதை தவிர்த்துவிட்டு தங்களுக்குப் பிடித்தமான விளையாட்டுகளை விளையாட வேண்டும். மேலும், புதிதாக விளையாட்டுகளை கற்றுக்கொள்ளுங்கள். உடல் வலிமையாக இருப்பதற்கும், மனதை ஒருங்கிணைத்துகவனச்சிதறலைதவிர்ப்பதற்கும், தவறான பாதையில் செல்வதை தடுப்பதற்கும் விளையாட்டு பெரும் உதவியாக இருக்கும். எனவே மாணவர்கள் தினமும் விளையாடுவதற்கான நேரத்தை ஒதுக்க வேண்டும் என்றார். முன்னதாக கபடி, இறகுப்பந்து, வலைபந்து, சதுரங்கம், கேரம், தொடரோட்டம் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் மாணவ, மாணவிகளுக்கு தனித்தனியாக நடத்தப்பட்டன. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வருகிற செப்டம்பர் 24 ந் தேதி வழங்கப்பட உள்ளன.



# பெரிய இல்லியம் அரசு பள்ளி மாணவர்கள்: விளையாட்டு போட்டிகளில் சாதனை

காங்கயம் , செப். 19

விளையாட்டு மைதானமோ, நிரந்தர உடற்கல்வி ஆசிரியரோ இல்லாத நிலையிலும் பெரிய இல்லியம் அரசு உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் குறுவள மைய தடகள விளையாட்டுப்போட்டிகளில் சிறப்பிடம் பெற்றுள்ளனர். காங்கயம் வட்டாரம், பொத்தியபாளையம் ஊராட்சிக்குட்பட்ட பெரிய இல்லியம் கிராமத்தில் செயல்பட்டு வந்த ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கடந்த 2018 ம் ஆண்டு அரசு உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது.

இப்பள்ளியில் இதுவரை அரசு சார்பில் உடற்கல்வி ஆசிரியர் நியமிக்கப்படவில்லை. மேலும் பள்ளியில் பெரிய அளவில் விளையாட்டு மைதானமும் இல்லை. ஆனால் இப்பள்ளி மாணவர்கள் விளையாட்டுப் போட்டிகளில் ஆர்வமுடன் பங்கேற்று வந்தனர்.

இந்நிலையில் மாணவர்களின் விளையாட்டுத் திறனைக்கண்ட பள்ளி நிர்வாகம் மாணவர்களை ஊக்குவிப்பதற்காக பள்ளி மேலாண்மைக்குழு, பெற்றோர் ஆசிரியர் கழகம் சார்பில் தற்காலிக உடற்கல்வி ஆசிரியர் நியமனம் செய்துள்ளனர். விளையாட்டு மைதானம் இல்லாததால் தனியார் வழித்தடத்தை ஓடுபாதையாக மாற்றி மாணவர்களுக்கு தற்காலிக உடற்கல்வி ஆசிரியர் பயிற்சி அளித்து வருகிறார்.

இந்நிலையில் அண்மையில் நடைபெற்ற காங்கயம் குறுவள மைய தடகள விளையாட்டுப்போட்டிகளில் இப்பள்ளியை சேர்ந்த மாணவர்கள் சிறப்பிடம் பிடித்து பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளனர். இதில் 14 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இப்பள்ளி மாணவர்கள் 9 பேர் முதலிடமும், 4 பேர் இரண்டாம் இடமும், ஒருவர் மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளனர். அதன்படி மாணவி லக்ஷிதா 3,000 மீட்டர், 1,500 மீட்டர் ஓட்டப்பந்தயங்களில் முதலிடமும், 100 மீட்டர் தடைத் தாண்டும் பிரிவில் மூன்றாம் இடமும் பிடித்துள்ளார். மாணவி திவ்யா உயரம் தாண்டுதல், தடைத்தாண்டும் ஓட்டம் 100 மீட்டர் பிரிவில் முதலிடம் பிடித்துள்ளார்.

மாணவி விஜயலட்சுமி 400 மீட்டர், 600 மீட்டர் ஓட்டப்பந்தயங்களில் முதலிடமும் பெற்றார். தொடர் ஓட்டம் 100 , 4 பிரிவில் மாணவிகள் பிரிவில் தீக்ஷனா, காஷ்மீரா, விஜயலட்சுமி, திவ்யா ஆகியோரும், மாணவர்கள் பிரிவில் விஷ்வா, ஜீவானந்தம், தினேஷ், மோத்தீஷ் ஆகியோரும் முதலிடம் பிடித்தனர். மாணவர் விஷ்வா, தடைத்தாண்டும் ஓட்டம் 80 மீட்டர் பிரிவில் முதலிடமும், 400 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் இரண்டாமிடமும், மாணவர் தினேஷ் உயரம் தாண்டுதலில் முதலிடமும், தடைத்தாண்டும் ஓட்டம் 80 மீட்டர் பிரிவில் இரண்டாமிடமும், நீளம் தாண்டுதலில் மாணவர் ஜீவானந்தம் இரண்டாமிடத்தை பிடித்துள்ளனர். குறுவள மைய தடகள விளையாட்டுப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள், தற்காலிக உடற்கல்வி ஆசிரியர் மணிவேல் ஆகியோருக்கு பள்ளித் தலைமையாசிரியர் ஈஸ்வரி பாராட்டு தெரிவித்தார்.

# அவிநாசி ரவுண்டானாவில் பூங்கா அமைக்கும் பணிகள் தீவிரம்

அவிநாசி, செப். 19

கோவை சாலைகள் சந்திக்கும் இடத்தில் நெடுஞ்சாலைத்துறை சார்பில் ரவுண்டான அமைக்கப்பட்டுள்ளது தியாகி சஞ்சீவ்ராவ் பெயரில் பூங்கா அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவிநாசி புதிய பேருந்து நிலையம் அருகே ஈரோடு, திருப்பூர், கோவை சாலைகள் சந்திக்கும் இடத்தில் நெடுஞ்சாலைத்துறை சார்பில் ரவுண்டான அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், ரவுண்டானவில் அவிநாசி சுதந்திர போராட்ட தியாகியும், அவிநாசியில் வாரச்சந்தை, கல்வி நிலையங்கள் அமைய பல கோடி ரூபாய் மதிப்பிலான நிலத்தை தானமாக அளித்த தியாகி சஞ்சீவ்ராவ் பெயரில் பூங்கா அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.



இதனை அவிநாசி நல்லது நண்பர்கள் அறக்கட்டளையினர் தன்னார்வலர்கள் உதவியுடன் மேற்கொண்டு வருகின்றனர். பூங்காவில், காளை மாடு, ஆடு, மான், பறவை, படகு உள்ளிட்ட அமைப்புகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

தியாகி சஞ்சீவ்ராவ் பெயரில் அமைக்கப்பட்டு வரும் ரவுண்டான பூங்கா, நினைவு கல்வெட்டுக்கு பொதுமக்கள் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

# திருப்பூரில் தலையில் கல்லைப்போட்டு மனநிலை பாதித்த பெண் படுகொலை

திருப்பூர், செப். 19

கொலை செய்யப்பட்ட பெண்ணின் விவரம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. மனநிலை பாதித்த பெண்ணை கொன்று பாலியல் பலாத்காரம் செய்த சம்பவம் திருப்பூரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருப்பூர்அவிநாசிமங்கலம்சாலையில் உள்ள ஒரு கடை முன்பு மனநிலை பாதித்த பெண் ஒருவர் தங்கியிருந்து வந்தார். இந்தநிலையில் நேற்றிரவு அங்கு வந்த மர்மநபர் ஒருவர் திடீரென அந்த பெண்ணின் தலையில் கல்லை போட்டு கொலை செய்தார். இதையடுத்து உயிரிழந்த அந்த பெண்ணின் உடலை அங்குள்ள மழைநீர் வடிகால் கால்வாய் பகுதிக்கு தரதரவென இழுத்து சென்று பாலியல் பலாத்காரம் செய்தார். இன்று காலை பெண் கொலை செய்யப்பட்டு கிடப்பதை பார்த்து அதிர்ச்சியடைந்த அப்பகுதி பொதுமக்கள் உடனடியாக அவிநாசி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டனர்.

பின்னர் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். கொலை செய்யப்பட்ட பெண்ணின் விவரம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. கொலை செய்தவரின் உருவம் மற்றும் பெண்ணின் உடலை இழுத்து செல்லும் காட்சிகள் கடையில் உள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவாகி உள்ளது.

அந்த காட்சிகளை வைத்து போலீசார் மர்மநபரை தேடி வருகின்றனர். மனநிலை பாதித்த பெண்ணை கொன்று பாலியல் பலாத்காரம் செய்த சம்பவம் திருப்பூரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க. இல்லை: முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் பரபரப்பு பேச்சு



சென்னை, செப். 19

தேர்தல் வரும்போது தான் அதை முடிவு செய்ய முடியும் இது தனிப்பட்ட முடிவு அல்ல. கட்சியின் முடிவைதான் பேசுவேன்

அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் பத்திரிகையாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: கூட்டணி தர்மத்தை மீறி பேசும் எந்தவொரு கருத்தையும் தன்மானம் உள்ள அதிமுக தொண்டர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். சிட்டுக்குருவிக்கு பட்டம் கட்டினால் திமிர் பிடித்து ஆடும். அண்ணாமலைக்கு தகுதி மீறிய பதவி. அரசியல் கட்சி தலைவருக்கான தகுதி இல்லை, பா.ஜனதா தலைவருக்கான தகுதியில்லாமல் சிறுமை புத்திக்கொண்ட, தன்னை முன்னிலைப் படுத்திக் கொள்ளும் எண்ணத்தோடு, சிங்கக் கூட்டமாகிய அதிமுகவை பார்த்து சிறு நரி ஊளையிடுகிறது. ஊளையிடும் சிறு நரி தனியாக நிற்கட்டும். நோட்டாவைவிட கீழ் தான் வாக்கு வாங்குவார். அதை தாண்டி வாக்கு வாங்கமாட்டார். அப்படி உள்ளது அவருடைய செல்வாக்கு. அப்படி இருக்கும்போது பெரியார் பற்றி பேசுகிறார். பெரியாரை பற்றி பேச என்ன தகுதி இருக்கிறது. கழக பொதுச் செயலாளரை பற்றி பேச என்ன தகுதி இருக்கிறது. அம்மாவை பற்றி பேச என்ன தகுதி இருக்கிறது. கூட்டணி கட்சியை விமர்சனம் செய்து தன்னை முன்னிலைப்படுத்திக்கொள்ள நினைத்தால், அதிமுக தொண்டர்கள் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள். பலமுறை எச்சரித்தோம். இனிமேல் கடுமையாக விமர்சனம் செய்வார்கள். ஒரு கருத்து தெரிவித்தால், ஓராயிரம் பதிலடி கொடுக்கப்படும். கூட்டணியில் இருந்து கொண்டு இப்படி பேசி வருகிறார்கள். இதை நிறுத்துங்கள் என மேலிடத்தில் அறிவித்துவிட்டோம். பா.ஜனதா தொண்டர்கள் அதிமுகவுடன் கூட்டணி வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை விரும்புகிறார்கள். ஆனால் அண்ணாமலை விரும்பவில்லை. அண்ணாமலைக்கு காலே கிடையாது. பா.ஜனதா இங்கே கால் ஊன்றவே முடியாது. அப்படிபட்ட நிலைமை. உங்களது வாக்கு வங்கிகள் எங்களுக்குத் தெரியும். எங்களை வைத்துதான் உங்களுக்கு அடையாளம். தேர்தல் வரும்போதுதான் கூட்டணி குறித்து முடிவு செய்ய முடியும். கூட்டணி இப்போதைக்கு இல்லை. இதுதான் எங்கள் நிலைப்பாடு. இது தனிப்பட்ட முடிவு அல்ல. கட்சியின் முடிவைதான் தெரிவிப்பேன். இவ்வாறு ஜெயக்குமார் தெரிவித்தார்.

# அவினாசியில் திருப்பணி பாலாலய நிகழ்ச்சி



அவினாசி, செப். 19

கும்பாபிஷேக திருப்பணிக்கான பாலாலய நிகழ்ச்சி நேற்று நடந்தது பராமரிப்பு பணிகள் செய்து கும்பாபிஷேகம் நடத்துவது என கோவில் நிர்வாகத்தில் முடிவு செய்யப்பட்டது.

அவினாசி மங்கலம் ரோட்டில் பிரசித்தி பெற்ற ஆகாச இராயர் கோவில் உள்ளது இக்கோவில் கும்பாபிஷேக திருப்பணிக்கான பாலாலய நிகழ்ச்சி நேற்று நடந்தது. இக்கோவில் கும்பாபிஷேகம் கடந்த 2001 ம் ஆண்டு நடைபெற்றது. தற்போது 22 ஆண்டுகளுக்கு பிறகு பராமரிப்பு பணிகள் செய்து கும்பாபிஷேகம் நடத்துவது என கோவில் நிர்வாகத்தில் முடிவு செய்யப்பட்டது. அதற்கான பாலாலய நிகழ்ச்சி நேற்று நடந்தது. முன்னதாக கணபதி ஹோமம், வாஸ்து சாந்தி ஹோமம் நடந்தது. கோவில் சிவாச்சாரியார்கள் இந்த பாலாலய பூஜை செய்தனர். நிகழ்ச்சியில் அவினாசி, காசிகவுண்டன்புதூர், கருணை பாளையம், புதுப்பாளையம், பூலகாட்டு பாளையம் உள்ளிட்ட பல பகுதிகளில் இருந்து பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# தாராபுரத்தில் ரேக்ளா பந்தயம்



தாராபுரம், செப். 19

தாராபுரம் சாலையில் குண்டடம்ஒன்றியதிமுக., சார்பில் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் ரேக்ளா பந்தயம் நடைபெற்றது முதலிடம் பிடித்த ரேக்ளா மாட்டு வண்டியின் உரிமையாளர்களுக்கு முதல் பரிசு 1 பவுன் தங்க நாணயம் வழ்ஙகப்பட்டது.

தாராபுரத்தை அருகே யுள்ள உப்பாறு அணை அருகே பூளவாடி_தாராபுரம் சாலையில் குண்டடம் ஒன்றிய திமுக., சார்பில் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் ரேக்ளா பந்தயம் நடைபெற்றது.

ரேக்ளா மாட்டுவண்டி பந்தயத்திற்கு பொள்ளாச்சி, மடத்துக்குளம், உடுமலைப்பேட்டை, காங்கேயம், சென்னிமலை, முத்தூர் ,ஒட்டன்சத்திரம், கள்ளிமந்தயம், கரூர், அரவக்குறிச்சி ,கன்னிவாடி ஆகிய பகுதியில் இருந்து ஏராளமானோர் பந்தயத்தில் கலந்து கொண்டனர். 200 மீட்டர் மற்றும் 300 மீட்டர் என இரண்டு பிரிவுகளாக நடைபெற்றது.

200 மீட்டர் மாட்டு வண்டி பந்தயத்தில் வெற்றி பெற்று முதலிடம் பிடித்த ரேக்ளா மாட்டு வண்டியின் உரிமையாளர்களுக்கு முதல் பரிசு 1 பவுன் தங்க நாணயம் மற்றும் கோப்பை வழங்கப்பட்டது.

இரண்டாம் பரிசு 3/4 தங்க நாணயம் மற்றும் கோப்பை வழங்கப்பட்டது. மூன்றாவது பரிசு 1/2 பவுன் தங்க நாணயம் மற்றும் கோப்பை வழங்கப்பட்டது. நான்காவது பரிசு 1/4 பவுன் தங்க நாணயம் மற்றும் கோப்பை வழங்கப்பட்டது. ஐந்தாவது பரிசு வெள்ளி நாணயம் வழங்கப்பட்டது. 300 மீட்டர் ரேக்ளா மாட்டு வண்டி பந்தயத்தில் வெற்றி பெற்று முதலிடம் பிடித்த ரேக்ளா மாட்டு வண்டியின் உரிமையாளருக்கு 1 பவுன் தங்க நாணயம் மற்றும் கோப்பை வழங்கப்பட்டது. இரண்டாவது பரிசு 3/4 பவுன்தங்கநாணயம் மற்றும் கோப்பை வழங்கப்பட்டது. மூன்றாவது பரிசு 1/2 பவுன் தங்க நாணயம் கோப்பை வழங்கப்பட்டது. நான்காவது பரிசு 1/4 பவுன்தங்கநாணயம் வழங்கப்பட்டது. உப்பாறு அணை அருகே நடைபெற்ற ரேக்ளா மாட்டு வண்டி பந்தயத்தை காண குண்டடம் ,கொடுவாய் ,தாராபுரம் ,உடுமலைப்பேட்டை ,காங்கேயம் பகுதிகளிலிருந்து ஆண்கள், பெண்கள் ,குழந்தைகள் என ஏராளமான பொதுமக்கள் வந்திருந்தனர்.

# ஆனைமலை மலை கிராமத்தில் கர்ப்பிணி பெண்களுக்கு தொற்று நோய் பரிசோதனை



உடுமலை, செப். 19

மலைவாழ் குடியிருப்புகளில் ஏராளமான மலைவாழ் மக்கள் வசித்து வருகிறார்கள். மிஷன் இந்திர தனுஷ் 5.0 திட்டத்தின் கீழ் 17 குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது.


உடுமலை அடுத்த ஆனைமலை புலிகள் காப்பக பகுதியில் அமராவதி மற்றும் உடுமலை வனச்சரகங்கள் உள்ளன. இங்குள்ள மலைவாழ் குடியிருப்புகளில் ஏராளமான மலைவாழ் மக்கள் வசித்து வருகிறார்கள். இந்த நிலையில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை சார்பாக எரிசினம்பட்டி வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உட்பட்ட மாவடப்பு, காட்டுப்பட்டி, குளிப்பட்டி, குருமலை ஆகிய மலைவாழ் குடியிருப்புகளில் சுகாதார முகாம் நடைபெற்றது.

டாக்டர்.பூபதி தலைமையில் சுகாதார ஆய்வாளர்கள், செவிலியர்கள் அடங்கிய குழுவினர் மிஷன் இந்திர தனுஷ் 5.0 திட்டத்தின் கீழ் 17 குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது. மேலும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு தொற்று நோய் பரிசோதனை செய்யப்பட்டு 109 நபர்களுக்கு சிகிச்சை அளித்தனர். இதனால் மலைவாழ் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.



தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில் இந்து முன்னணியினர் மற்றும் பொதுமக்கள் சார்பில் நகர் மற்றும்கிராமப்புறங்களில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு 39 சிலைகள் வைக்கப்பட்டன குறிப்பாக எம்ஜிஆர் சிலை அருகில் தேசிய நெடுஞ்சாலையில் மூஷிக வாகனத்தில் அமைந்தபடி சிலை நிறுவி யாகசாலை அமைத்து பூஜைகள் நடைபெற்றன பின்பு விநாயகர் சிலை கண் திறந்து புனித நீர் ஊற்றி அபிஷேகம் செய்தனர் அதைத்தொடர்ந்து பக்தர்கள் மீது புனித நீர் தெளிக்கப்பட்டது உங்க பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது இந்நிகழ்ச்சியில் இந்து முன்னணியினர் இளைஞர் அணியினர்பொ துமக்கள் இந்து முன்னணி பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

# தண்ணீருக்காக அமராவதி அணைக்கு படையெடுக்கும் வனவிலங்குகள்: பொதுமக்கள் அச்சம்



உடுமலை, செப். 19

தேவையான உணவு மற்றும் தண்ணீரை மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகள் கொடுத்து அடைக்கலம் அளித்து வருகிறது வனவிலங்குகள் உடுமலைமூணாறு சாலையை கடந்து அணைப் பகுதிக்குள் சென்று வந்த வண்ணம் உள்ளது

உடுமலை அடுத்த ஆனைமலை புலிகள் காப்பகத்தில் உடுமலை மற்றும் அமராவதி வனச்சரங்கள் உள்ளன.இங்கு யானை, புலி, சிறுத்தை, காட்டெருமை, கடமான் உள்ளிட்ட ஏராளமான வனவிலங்குகள் வசித்து வருகின்றன. அவற்றுக்கு தேவையான உணவு மற்றும் தண்ணீரை மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகள் கொடுத்து அடைக்கலம் அளித்து வருகிறது. இது குறித்து அந்த பகுதி மக்கள் கூறியதாவது: வறட்சி காலத்தில் ஏற்படுகின்ற தண்ணீர் பற்றாக்குறையால் உணவு மற்றும் குடிநீரை தேடிக்கொண்டு வனவிலங்கு அடிவாரப் பகுதிக்கு வந்து விடுவது வாடிக்கையாக உள்ளது. அப்போது வாகன போக்குவரத்து காரணமாக உடுமலைமூணாறு சாலையை கடந்து அமராவதிஅணைக்கு செல்வதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் வன விலங்குகள் மனித மோதல் ஏற்படும் சூழல்உருவானது.அதைத் தொடர்ந்து மலை அடிவாரப் பகுதியில் வனத்துறை சார்பில் தடுப்பணைகள், தண்ணீர் தொட்டிகள் கட்டப்பட்டது. கோடை காலத்தில் குடிநீர் தொட்டிகளில் தண்ணீர் நிரப்புவதுடன் தடுப்பணையில் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்குவதால் வனவிலங்குகள் சாலையை கடப்பதற்கான அவசியம் எழவில்லை. தடுப்பணைகள் வறண்டன .அவற்றில் தேங்கி உள்ள தண்ணீரை குடித்து விட்டு வனவிலங்குகள் வனப்பகுதிக்குள் சென்று விடுவது வாடிக்கையாக இருந்தது. இந்த சூழலில் நடப்பு ஆண்டில் தென்மேற்கு பருவமழை தீவிரமடையவில்லை. இதனால் அடிவாரப் பகுதியில் கட்டப்பட்டுள்ள தடுப்பணைகள் நீர்வரத்து இல்லாமல் வறண்டு கிடக்கிறது. இதன் காரணமாக தண்ணீரை தேடி கொண்டு வரும் வனவிலங்குகள் உடுமலை மூணாறு சாலையை கடந்து அணைப் பகுதிக்குள் சென்று வந்த வண்ணம் உள்ளது. பருவமழை பெய்யுமா?தடுப்பணைகள் நிரம்புமா? வனவிலங்குகளுக்கான உணவு தண்ணீர் பற்றாக்குறைக்கு நிரந்தர தீர்வு கிடைக்குமா என்பது இயற்கையின் கையில் தான் உள்ளது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# திருச்சியில் தாய் நேசம் அறக்கட்டளை சார்பில் சிறந்த ஆசிரியர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு



திருச்சி, செப். 19

திருச்சியில் தாய் நேசம் அறக்கட்டளை சார்பில் சிறந்த ஆசிரியர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு நடைபெற்றது இந்தியா உலகளவில் வல்லரசாக வருவதற்க்கு இன்றைய இளைய தலைமுறையினரால் தான் முடியும் என்று நம்பிக்கையுடன் கூறியவர் மறைந்த நமது நாட்டின் சிறந்த விஞ்ஞானியும் குடியரசு தலைவருமான டாக்டர் ஏ. பி. ஜே. அப்துல் கலாம் அவர்கள் அவரது சொல்லை மெய்பிக்கும் வகையில் தற்போது பல சாதனைகளை நமது நாடு செய்து வருகிறது அப்படிப்பட்ட இளைஞர்கள் உருவாக மிக முக்கிய பங்கு வகிப்பவர்கள் நல்ல ஆசிரியர்கள் அப்படிபட்ட ஆசிரியர்களை இன்றைய இளைய தலைமுறையினர் மரியாதையுடன் நடத்த வேண்டும் தவறு செய்யும் மாணவர்களை ஆசிரியர் கண்டிக்கிறார் என்றால் அந்த மாணவர்களின் எதிர்காலம் வீணாகி விட கூடாது என்கிற நல்ல எண்ணத்தில் தான் என்பதை மாணவர்கள் மற்றும் அவர்களுடைய பெற்றோர்களும் உணர வேண்டும் அப்படி உணர்ந்து தவறை திருத்தி கொள்ளும் பட்சத்தில் அவர்கள் சாதனை மாணவர்களாக உருவாகின்றனர் அப்படிப்பட்ட சாதனையாளர்களை உருவாக்கும் ஆசிரியர்களுக்கு பாராட்டு மற்றும் வாழ்த்துக்கள் தெரிவிக்கும் நிகழ்வு திருச்சி மாவட்டத்தில் பல்வேறு சமூக நல பணிகளை செய்து வரும் தாய் நேசம் அறக்கட்டளை சார்பில் சத்திரம் பேருந்து நிலையம் அருகில் உள்ள ஸ்ருதி அரங்கில் நடைபெற்றது இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக அனைத்து மக்கள் சக்தி இயக்கத்தின் தலைவர் Dr. தலைமகன் எஸ். வெங்கடேசன் திருச்சி மாவட்ட மகளிர் திட்ட பொறுப்பாளர் வி. ஆனந்தி தேசிய விருது பெற்ற குறும்படத்தின் நடிகரும் மாற்றம் அமைப்பின் நிர்வாகியும் அகில இந்திய மக்கள் உரிமை கள் மற்றும் சட்ட விழிப்புணர்வு கழகத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளருமான ஆர்.ஏ.தாமஸ் நோவுட் வேஸ்ட் நிர்வாகி மோகன் ஏகாம்பரம் திருச்சி மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை மாநகர துணை அமைப்பாளர் Lion.A.R.ரெங்கராஜன் சமூக ஆர்வலர் சேவை ரத்னா Dr.ஏ. ஆர்மஸ்டார்ங் ராபி உள்ளிட்டோர் கலந்து கொண்டு ஆசிரியர் மற்றும் ஆசிரியை களுக்கு சிறந்த ஆசிரியர்களுக்கு விருதுகளை வழங்கினர் முன்னதாக நிகழ்ச்சி தமிழதாய் வாழ்த்து பாடலுடன் குத்து விளக்கேற்றி நிகழ்ச்சி தொடங்கப்பட்டது அதனை தொடர்ந்து வரவேற்புரை விருந்தினர் உரை மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சி நடனம் ஆசிரியர்களுக்கான விருது வழங்குதல் மற்றும் இறுதியில் நன்றியுரை மற்றும் தேசிய கீதத்துடன் நிகழ்ச்சி சிறப்பாக நிறைவு பெற்றது

இந்நிகழ்வில் புதிய பாதை அறக்கட்டளை நிர்வாகி தீபலட்சுமி டாக்டர் அம்பேத்கர் நற்பணி இயக்கத்தின் நிர்வாகி பக்கிரிசாமி திரளான சமூக ஆர்வலர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் இந்நிகச்சிக்கான ஏற்பாடுகளை தாய் நேசம் அறக்கட்டளையின் அறங்காவலர் மற்றும் நிறுவனர் முனைவர் ஹெப்சி சத்திய ராக்கினி அவர்கள் தலைமையில் செயலாளர் பிரேமா ஒருங்கிணைப்பாளர் கீதா ரேகா ஆலோசகர் பிரேமலதா அட்மின் மகேஷ்வரி சாந்தி அறங்காவலர்கள் ஜெசிந்தா பிரியா மகேஷ்வரி குமாரி போவாஸ் செல்வராஜ் அபிஷா ஜனனி லட்சுமி ஆனந்தவள்ளி கயல்விழி உள்ளிட்ட நிர்வாகிகள் ஏற்பாடு செய்திருந்தனர்

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 26ம் தேதி தபால் கோட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நடக்கிறது

திருப்பூர், செப். 19

திருப்பூர் அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வருகிற 26ந் தேதி மாலை 4 மணிக்கு மக்கள் குறைதீர்க்கும் நாள் நடத்தப்படுகிறது. பொதுமக்கள் தங்கள் யோசனை, புகார்களை ஏ.விஜயதன சேகர், அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர், திருப்பூர் கோட்டம், திருப்பூர் 641601 என்ற முகவரிக்கு கடிதத்தை அனுப்பி வைக்க வேண்டும். கடிதத்தின் மீது DAK ADALAT CASE என்று தவறாமல் குறிப்பிட்டு இருக்க வேண்டும். வருகிற 20ந் தேதிக்குள் கடிதம் அனுப்பி வைக்கலாம் என்று திருப்பூர் அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் விஜயதனசேகர் தெரிவித்துள்ளார்.

# அம்பத்தூரில் பார் உரிமையாளர் வீட்டில் ரூ.50 லட்சம் 50 பவுன் நகை கொள்ளை

அம்பத்தூர், செப். 19

அம்பத்தூர், ஞானமூர்த்தி நகர், விட்டல் தெருவை சேர்ந்தவர் ராஜேஷ். அம்பத்தூரில் 3 டாஸ்மாக் பார்களை நடத்தி வருகிறார். இவர் கடந்த 16ந்தேதி வீட்டை பூட்டிவிட்டு உறவினர் வீட்டு நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக குடும்பத்துடன் சொந்த ஊரான தஞ்சாவூருக்கு சென்றார்.

அவர்கள் திரும்பி வந்த போது வீட்டின் வெளிப்புற கதவு பூட்டு உடைந்து கிடப்பதைகண்டுஅதிர்ச்சி அடைந்தனர்.

வீட்டுக்குள் சென்று பார்த்தபோது பீரோவில் இருந்த 50 பவுன் நகை ரூ.50 லட்சம் ரொக்கம், ரூ.2 லட்சம் மதிப்புள்ள விலை உயர்ந்த வாட்ச் மற்றும் பொருட்களை மர்ம நபர்கள் கொள்ளையடித்து சென்று இருப்பது தெரிந்தது.

இதுகுறித்து அம்பத்தூர் போலீசில் புகார் செய்யப்பட்டது. இன்ஸ்பெக்டர் அலமேலு மற்றும் போலீசார் விரைந்து வந்து விசாரணை நடத்தினர்.

அங்கு பதிந்து இருந்த ரேகைகளை கைரேகை நிபுணர்கள் பதிவு செய்தனர். ராஜேஷ் குடும்பத்துடன் வெளியூர் சென்று இருப்பதை நோட்டமிட்டு மர்ம நபர்கள் கைவரிசை காட்டி உள்ளனர். அவர்களை பிடிக்க போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

அப்பகுதியில் உள்ள காண்காணிப்பு கேமராவில் கொள்ளையர்கள் உருவம் பதிவாகி உள்ளதா? என்றும் ஆய்வு செய்து வருகின்றனர். அம்பத்தூர் மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதியில் கடந்த சில நாட்களாக கொள்ளை சம்பவம் அதிகரித்து உள்ளது.

போலீசார் ரோந்து பணியை தீவிரப்படுத்தி கொள்ளையர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள்கோரிக்கைவிடுத்து உள்ளனர்.

# ரசாயனம் கலந்த விநாயகர் சிலைகளை மாமல்லபுரம் கடலில் கரைக்க தடை

மாமல்லபுரம், செப். 19

"பிளாஸ்டர் ஆப் பாரீஸ்" ரசாயனம் பயன்படுத்தப்படாத சிலைகள் என சிலை வைத்துள்ள அமைப்பினர் கூறி அனுமதி வாங்கியுள்ளனர். நான்கு சக்கர வாகனத்தில் மட்டுமே கொண்டு வர வேண்டும்.



விநாயகர் சதுர்த்தி கொண்டாட வைக்கப்படும் சிலைகளை மாமல்லபுரம் கடலில் வரும் 24ம் தேதி கரைக்க போலீசார் அனுமதி வழங்கியுள்ளனர்.,

செங்கல்பட்டு மாவட்டத்தில் வைக்கப்பட்டுள்ள 365 சிலைகளும், மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் உத்தரவின்படி "பிளாஸ்டர் ஆப் பாரீஸ்" ரசாயனம் பயன்படுத்தப்படாத சிலைகள் என சிலை வைத்துள்ள அமைப்பினர் கூறி அனுமதி வாங்கியுள்ளனர்.

இந்த சிலைகளை செங்கல்பட்டு மாவட்ட கடலோர பகுதிகளான மாமல்லபுரம், சதுரங்கபட்டினம், கடலூர், கடப்பாக்கம், பெரியகுப்பம் பகுதிகளுக்கு பக்தர்கள் கரைக்க வரும் போது சிலைகள் பரிசோதனை செய்யப்படும் அதில் ரசாயன கலவை இருப்பது தெரியவந்தால் கடலில் கரைக்க அனுமதி கிடையாது.

அதேபோல் சிலைகளை மாட்டு வண்டி, மீன்பாடி ஆட்டோ, ரிக்ஷா, தள்ளு வண்டி போன்றவைகளில் கொண்டுவரவும் அனுமதி கிடையாது.

டிராக்டர், மினிலாரி, வேன் போன்ற நான்கு சக்கர வாகனத்தில் மட்டுமே கொண்டு வரவேண்டும் என செங்கல்பட்டு மாவட்ட போலீசார் அறிவுறுத்தி உள்ளனர்.

# காட்டு யானைகள் நடமாட்டத்தை கண்காணிக்க அதிநவீன கருவிகளுடன் எச்சரிக்கை கோபுரம்

ஊட்டி, செப். 19

நள்ளிரவு நேரத்தில் தொலைதூரத்தில் நடந்து வரும் காட்டு யானைகளையும் தெளிவாக படம் பிடிக்க இயலும். காட்டு யானைகளின் வரத்தை முன்கூட்டியே அறிவிக்கும் வகையில் சைரன் ஒலியும் எழுப்பப்படும்.





நீலகிரி மாவட்டத்தில் பிதர்காடு, சேரம்பாடி, ஓவேலி உள்ளிட்ட பகுதிகளில் காட்டு யானைகள் அதிகம் உள்ளன. அவை தற்போது காட்டுக்குள் இருந்து அடிக்கடி வெளியேறி ஊருக்குள் புகுந்து விளைநிலங்களை சேதப்படுத்தி வருகின்றன. காட்டு யானைகள் பெரும்பாலும் இரவு நேரங்களில் தான் வனப்பகுதியில் இருந்து வெளியேறி குடியிருப்பு பகுதிகளுக்கு செல்கிறது. எனவே அவற்றின் நடமாட்டத்தை பொதுமக்களால் சரிவர கணிக்க முடியவில்லை. இதனால் அங்கு மனிதன் விலங்கு மோதல் தொடர் கதையாக உள்ளது. இந்நிலையில் கூடலூர் பகுதியில் அதிநவீன கேமிராக்களுடன் கூடிய எச்சரிக்கை கோபுரங்களை அமைப்பது என வனத்துறையினர் முடிவு செய்து உள்ளனர். இதன் ஒரு பகுதியாக அங்கு காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகம் இருப்பதாக கருதப்படும் முக்கட்டி, நெலாக் கோட்டை, கோட்டாடு உள்பட 18 பகுதிகளில் அதிநவீன காமிராக்களுடன் எச்சரிக்கை கோபுரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதுகுறித்து பிதர்காடு வனச்சரக அதிகாரி ரவி கூறுகையில், ஊரையொட்டிய காட்டுப்பகுதியில் எச்சரிக்கை கோபுரம் அமைக்கப்பட்டு உள்ளது. இதில் கேமிரா, சிம்கார்டு மற்றும் சைரன் கருவி ஆகியவை பொருத்தப்பட்டு உள்ளன. எச்சரிக்கை கோபுரத்தில் உள்ள தானியங்கி கேமிரா மூலம் நள்ளிரவு நேரத்தில் தொலைதூரத்தில் நடந்து வரும் காட்டு யானைகளையும் தெளிவாக படம் பிடிக்க இயலும். அவை உடனடியாக வனத்துறை அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் காட்டு யானைகளின் வரத்தை முன்கூட்டியே அறிவிக்கும் வகையில் சைரன் ஒலியும் எழுப்பப்படும். இதனால் பொதுமக்கள் சுதாரித்து கொண்டு தப்பி பிழைக்கலாம். வனத்துறை அதிகாரிகளும் உடனடியாக சம்பவ இடத்துக்கு சென்று காட்டு யானைகளை விரட்ட முடியும் என்று தெரிவித்து உள்ளார்.

# திண்டுக்கல்லில் தடையை மீறி வைத்த விநாயகர் சிலை அகற்றம்

திண்டுக்கல், செப். 19

இருந்தபோதும் இந்து முன்னணி அமைப்பினர் விநாயகர் சிலையை ஊர்வலமாக எடுத்துச் சென்றதால் அதனை போலீசார் தடுத்து நிறுத்தினர். போலீசார் விநாயகர் சிலையை கைப்பற்றி தாங்களே எடுத்துச் சென்று திண்டுக்கல் கோட்டைக்குளத்தில் கரைத்தனர்.




விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு திண்டுக்கல்லில் பல்வேறு இடங்களில் இந்து அமைப்பினர் சார்பில் சிலைகள் வைத்து பூஜை செய்யப்பட்டது. திண்டுக்கல் குடைப்பாறைப்பட்டியில் இந்து முன்னணி சார்பில் சிலை வைத்து வழிபாடு நடத்த அனுமதிக்குமாறு கேட்டிருந்தனர். ஆனால் போலீசார் இதற்கு அனுமதி வழங்கவில்லை. இருந்தபோதும் இந்து முன்னணி சார்பில் விநாயகர் சிலை வைத்து அதனை நிர்வாகிகள் வழிபாடு செய்தனர்.

மேலும் நகரின் முக்கிய தெருக்கள் வழியாக மேள தாளம் முழங்க எடுத்துச் சென்று அதனை கரைக்க வந்தனர். இது குறித்து போலீசாருக்கு தகவல் வரவே டி.எஸ்.பி. கோகுலகிருஷ்ணன் தலைமையில் போலீசார், தரசில்தார் செழியன் மற்றும் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைநதனர். அனுமதி வழங்கப்படாத இடத்தில் சிலைகள் வைக்கக்கூடாது என அவர்கள் தெரிவித்தனர். இருந்தபோதும் இந்து முன்னணி அமைப்பினர் விநாயகர் சிலையை ஊர்வலமாக எடுத்துச் சென்றதால் அதனை போலீசார் தடுத்து நிறுத்தினர். அப்போது போலீசாருக்கும், இந்து முன்னணி நிர்வாகிகளுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதால் பரபரப்பான சூழல் நிலவியது. போலீசார் விநாயகர் சிலையை கைப்பற்றி தாங்களே எடுத்துச் சென்று திண்டுக்கல் கோட்டைக்குளத்தில் கரைத்தனர். மேலும் அனுமதியின்றி விநாயகர் சிலையை வைத்து ஊர்வலமாக எடுத்து வந்த இந்து முன்னணி நகர தலைவர் ஞானசுந்தரம் மற்றும் சங்கர் கணேஷ் உள்பட 38 பேரை போலீசார் கைது செய்தனர்.

# ராணுவ வீரர்களை யோகா பயிற்றுநர்களாக மாற்றி காட்டிய ஈஷா

கோவை, செப். 19

அந்தமான் நிக்கோபார் தீவு ஆகிய இடங்களில் பணியாற்றும் 20 கப்பற்படை வீரர்கள் பங்கேற்றனர். படைப் பிரிவுக்கு சென்று அங்குள்ள மற்ற வீரர்களுக்கு யோகா கற்றுக்கொடுப்பதற்கான பயிற்சியும் வழங்கப்பட்டது.



84 தரைப்படை வீரர்கள் மற்றும் 20 கப்பற்படை வீரர்கள் உட்பட 104 இந்திய பாதுகாப்புப் படை வீரர்கள் கோவை ஈஷா யோக மையத்தில் 15 நாள் ஹத யோகா பயிற்றுநர் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்தனர். இந்திய ராணுவத்தின் தெற்கு பிராந்திய படைப் பிரிவும், ஈஷா யோக மையமும் இணைந்து நடத்தும் ராணுவ வீரர்களுக்கான சிறப்பு யோகா வகுப்புகள் கடந்த சுதந்திர தினத்தன்று (ஆக.15) தொடங்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் சென்னை, பெங்களூரு, செகந்தராபாத், மும்பை, புனே, அகமதாபாத், குவாலியர், ஜான்சி உள்ளிட்ட இடங்களில் பணியாற்றும் சுமார் 10,000 ராணுவ வீரர்களுக்கு ஈஷா ஹத யோகா ஆசிரியர்கள் இலவசமாக யோகா கற்றுக்கொடுத்தனர்.

இந்நிலையில் இதன் அடுத்தகட்டமாக, ராணுவ வீரர்களையே ஹத யோகா பயிற்றுநர்களாக மாற்றும் 15 நாள் ஹத யோகா பயிற்றுநர் வகுப்பு கோவை ஈஷா யோக மையத்தில் செப்.1ம் தேதி முதல் செப்.15ம் தேதி வரை நடைபெற்றது. இதில் தரைப்படையின் தெற்கு பிராந்திய படைப் பிரிவில் பல்வேறு இடங்களில் பணியாற்றும் 84 ராணுவ வீரர்கள் மற்றும் விசாகப்பட்டினம், கொச்சின், டெல்லி, அந்தமான் நிக்கோபார் தீவு ஆகிய இடங்களில் பணியாற்றும் 20 கப்பற்படை வீரர்கள் பங்கேற்றனர்.

அவர்களுக்கு சூர்ய க்ரியா, அங்கமர்த்தனா மற்றும் உப யோகா வகுப்புகள் கற்றுக்கொடுக்கப்பட்டது. மேலும், அவர்கள் தங்கள் படைப் பிரிவுக்கு சென்று அங்குள்ள மற்ற வீரர்களுக்கு யோகா கற்றுக்கொடுப்பதற்கான பயிற்சியும் வழங்கப்பட்டது.

இவ்வகுப்பில் கற்றுக் கொண்ட யோக பயிற்சிகளை ராணுவ வீரர்கள் தினமும் செய்வதன்மூலம் தங்கள் பணியில் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அழுத்தங்களை சிறப்பாக கையாள முடியும்.

# நாமக்கல் மாவட்டத்தில் ஷவர்மா விற்பனைக்கு தடை உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் அருண் தகவல்

நாமக்கல், செப். 19

ஓட்டலில் உணவு சாப்பிட்ட 9ம் வகுப்பு மாணவி பலியாகி உள்ளார். உணவகத்தில் உள்ள இறைச்சிகள் மற்றும் உணவுப் பொருட்களை அழித்து ஓட்டலுக்கு உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகள் 'சீல்' வைத்தனர்.



நாமக்கல் பரமத்தி சாலையில் ஒரு தனியார் ஓட்டல் இயங்கி வருகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு இந்த ஓட்டலில் உணவு சாப்பிட்ட 9ம் வகுப்பு மாணவி உடல் நிலை பாதிப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் இன்று காலை பலியாகி உள்ளார்.

இந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையில் நேற்று முன் தினம் உணவகத்தில் சாப்பிட்ட கர்ப்பிணி, குழந்தைகள் உட்பட 44 பேருக்கு உடல் நலம் பாதிப்பு ஏற்பட்டது. இவர்கள் அனைவரும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதைத்தொடர்ந்து ஓட்டலில் உள்ள பொருட்கள் அனைத்தையும் அழிக்க கலெக்டர் உமா, உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இதையடுத்து உணவகத்தில் உள்ள இறைச்சிகள் மற்றும் உணவுப் பொருட்களை அழித்து ஓட்டலுக்கு உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகள் 'சீல்' வைத்தனர்.

இதனை தொடர்ந்து ஓட்டல் உரிமையாளர் உட்பட 3 பேரை போலீசார் கைது செய்யப்பட்ட நிலையில் நாமக்கல் மாவட்டத்தில் துரித உணவு வகைகளான ஷவர்மா, கிரில் சிக்கன் ஆகியவற்றை விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனை ஆட்சியர் உமா, மாவட்ட எஸ்பி ராஜேஷ் கண்ணன், உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் அருண் ஆகியோர் கூட்டாக பேட்டி அளித்தனர்.

# ரெயிலில் அடிபட்டு வாலிபர் பலி

நாகப்பட்டினம், செப். 19

நீல, சிவப்பு நிற முழுக்கை டீ சர்ட், டவுசரும் அணிந்திருந்தார். போலீசார் வழக்குப்பதிவு செய்து இறந்தவர் குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



நாகை நல்லியான்தோட்டம் பகுதியில் உள்ள ரெயில் தண்டவாளத்தில் சுமார் 30 வயது மதிக்கத்தக்க வாலிபர் ரயிலில் அடிபட்டு இறந்து கிடந்தார். இதைப்பார்த்த அக்கம் பக்கத்தினர் நாகை இருப்புப் பாதை போலீஸ் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர்.

அதன்பேரில் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ராஜு, சிறப்பு சப் இன்ஸ்பெக்டர் குணசேகரன் ஆகியோர் தலைமையில் போலீசார் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக நாகை மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இறந்து கிடந்தவர் நீல, சிவப்பு நிற முழுக்கை டீ சர்ட், டவுசரும் அணிந்திருந்தார்.

இது குறித்து இருப்பு பாதை போலீசார் வழக்குப்பதிவு செய்து ரெயிலில் அடிபட்டு இறந்து கிடந்தவர் யார்? எந்த ஊரை சேர்ந்தவர்? ரெயிலில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது வேறு ஏதேனும் காரணமா? என்பன உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். நாகையில் வாலிபர் ரயிலில் அடிபட்டு இறந்து கிடந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# பாராளுமன்ற தேர்தலுக்காக பெண்களுக்கு 1000 ரூபாய் உரிமை தொகையை தி.மு.க. அரசு வழங்குகிறதுசெல்லூர் ராஜீ குற்றச்சாட்டு

மதுரை, செப். 19

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மதுரை மாநகர் அ.தி.மு.க. சார்பில் டி.எம்.கோர்ட் பகுதியில் முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் செல்லூர் ராஜூ பேசியதாவது: இந்த நாட்டின் பொதுக்களத்தில் நிற்கும் உரிமை மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர்கள் அண்ணா, பெரியார். பெண்கள் பொது வாழ்க்கையில் வரவும் வித்திட்டவர்கள் இவர்கள் தான். தமிழக அரசியல் வரலாற்றில் ஒரு மாற்றத்தை உருவாக்கியவர் அண்ணா. தம்பி உடையான் படைக்கு அஞ்சான் என்று பெயர் பெற்றவர். தி.மு.க. அண்ணாவால் உருவாக்கப்பட்டது. ஐம்பெரும் தலைவர்களால் உருவாக்கப்பட்டது தி.மு.க. இதையும் படியுங்கள்: என்ஜினீயருக்கு கொலை மிரட்டல்: நடிகர் பாபிசிம்ஹா உள்பட 4 பேர் மீது வழக்கு அண்ணா இருக்கும் வரை கலைஞரை முன்னிலைப்படுத்தவில்லை. தாய் எப்படி அனைத்து பிள்ளைகளையும் ஒரே மாதிரி வளர்ப்பாரோ அதுபோல் தான் அண்ணா அனைவரையும் ஒன்றாக நினைத்தார். பல தலைவர்களை உருவாக்கிய பெருமை அண்ணாவிற்கு உண்டு. தற்போது அரசியல் தலைவர்கள் நட்சத்திர விடுதிகளில் தங்கி பிரசாரம் செய்கிறார்கள், சுற்றுப் பயணம் செய்கிறார்கள். ஆனால் பட்டினி கிடந்து தொண்டர் வீட்டில் தங்கி கட்சியை வளர்த்தவர் அண்ணா. தி.மு.க.வை வளர்த்தவர் எம்.ஜி.ஆர். தி.மு.க.விலிருந்து பிரிந்து வந்த பிறகு அ.தி.மு.க.வை உருவாக்கினார். இருப்பினும் அண்ணாவை நினைவு கூறும் வகையில் அ.தி.மு.க.வின் கொடியில் அண்ணா உருவ படத்தை பொறித்தார். இறந்தும் இறைவனாக எம்.ஜி.ஆர். இன்னும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார். இதையும் படியுங்கள்: நாமக்கல் மாவட்டத்தில் ஷவர்மா விற்பனைக்கு தடை உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் அருண் தகவல் அண்ணா, எம்.ஜி.ஆர். , ஜெயலலிதா யாரும் வாரிசு அரசியல் செய்யவில்லை. தன்னுடைய வாரிசுகளை கொண்டு வரவில்லை. அ.தி.மு.க. காலத்தில் கொண்டு வரப்பட்ட பல திட்டங்கள் தற்போது தி.மு.க. ஆட்சியில் மூடு விழா கண்டுள்ளது. மதுரையில் 2 அமைச்சர்கள் இருக்கிறார்கள். என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்றே தெரியவில்லை. தமிழகத்தில் அனைத்து பொருட்களின் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது. ஆட்சிக்கு வந்தவுடன் ஆயிரம் ரூபாய் கொடுத்து இருக்கலாம். 2 ஆண்டுகளுக்கு பிறகு கொடுத்து இருக்கிறார்கள். இன்னும் 6 மாதத்தில் நாடாளுமன்ற தேர்தல் வருகிறது. அதற்காகத்தான் கொடுக்கிறார்கள். வாக்குறுதிகள் 99 சதவீதம் நிறைவேற்றப்பட்டதாக மு.க.ஸ்டாலின் கூறுகிறார். பாராளுமன்ற தேர்தலுக்காகவே பெண்களுக்கு ஆயிரம் ரூபாய் உரிமையை தொகையை தி.மு.க. அரசு வழங்குகிறது. பொம்மை முதலமைச்சராகவே அவர் இருக்கிறார். பிறர் எழுதிக் கொடுப்பதை பேசுகிறார். தி.முக. ஆட்சியை விரைவில் பொதுமக்கள் வீட்டுக்கு அனுப்ப வேண்டும். வருகிற நாடாளு மன்ற தேர்தல், சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மையான வாக்குகளை அ.தி.மு.க.வுக்கு வழங்கி வெற்றிபெறசெய்ய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.



# தூத்துக்குடி பள்ளியில் மாணவ மாணவிகளுக்கு இலவச சைக்கிள்கள்

தூத்துக்குடி, செப். 19

தூத்துக்குடி தங்கம்மாள் மேல்நிலைப்பள்ளியில் மாணவ மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவில் பள்ளியின் செயலாளர் ஜீவன் ஜேக்கப் மற்றும் ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி தங்கம்மாள் மேல்நிலைப்பள்ளியில் மாணவ மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. முன்னாள் மாவட்ட காங்கிரஸ் தலைவர் முத்துக்குட்டி தலைமை தாங்கினார். ஐ.என்.டி.யு.சி. தொழிற்சங்க செயலாளர் ஷிவ்ராஜ் மோகன், முன்னிலை வகித்தார். ஆசிரியர் செல்வமரகதம் வரவேற்றார். இதில் ஐஸ்வர்யம் கம்பி நிறுவனங்களின் சார்பில் 10 மாணவ மாணவிகளுக்கு இலவச சைக்கிள்களை மேலாளர் உமயவேல் வழங்கினார். விழாவில் பள்ளியின் செயலாளர் ஜீவன் ஜேக்கப் மற்றும் ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை உலகின் ஒளி அறக்கட்டளையை சேர்ந்த ஜான்சன் செய்திருந்தார். முடிவில் பள்ளியின் தலைமை ஆசிரியர் ஜெபக்குமார் விக்டர் நன்றி கூறினார்.

# விளை நிலங்களை சேதப்படுத்திய மக்னா யானை

மேலசொக்கநாதபுரம், செப். 19

தேனி மாவட்டம் தேவாரம், உத்தமபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் அடிக்கடி மக்னா யானை நடமாட்டம் இருப்பது வழக்கமாக உள்ளது.

இந்த யானை வாழை, தென்னை உள்ளிட்ட பயிர்களை சேதப்படுத்தி செல்வதுடன் தோட்டக் காவலாளிகளையும் தாக்கியுள்ளது. தேனி மாவட்டத்தில் மக்னா யானை தாக்கி இதுவரை ஏராளமான விவசாய கூலித் தொழிலாளர்கள் உயிரிழந்து உள்ளனர்.

எனவே இந்த யானையை விரட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வனத்துறைக்கு கோரிக்கை விடுத்த வண்ணம் இருந்தனர். இதனால் கடந்த வருடம் டாப்சிலிப் பகுதியில் இருந்து கும்கி யானைகள் வரவழைக்கப்பட்டு மக்னா யானையை பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். சுமார் 1 வாரம் வரை தேனி மாவட்டத்தில் கும்கி யானைகள் நிறுத்தப்பட்டு பல்வேறு இடங்களில் மக்னா யானையை தேடும் பணியில் ஈடுபட்டனர். ஆனால் மக்னா யானை வனத்துறையினருக்கு போக்கு காட்டி பிடிபடாமல் சென்றது. இந்நிலையில் தற்போது தேவாரம் அருகே உள்ள வட்ட ஓடைப்பகுதியில் மக்னா யானை புகுந்து வாழை உள்ளிட்ட பயிர்களை சேதப்படுத்தி சென்றுள்ளது.

இதனால் விவசாயிகள் மீண்டும் அதிர்ச்சியடைந்துள்ளனர். எனவே இந்த யானையை வனப்பகுதிக்குள் விரட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.



# பாபி சிம்ஹா நடிப்பில், "தடை உடை" படத்தின் ஃபர்ஸ்ட் லுக் வெளியீடு





*Mudhra's film factory* தயாரிப்பில், அறிமுக இயக்குநர் ராகேஷ் N.S இயக்கத்தில். நடிகர் சிம்ஹா நடிக்கும், கமர்ஷியல்ஃபேமிலிஎண்டர்டெயினர்திரைப்படமான "தடை உடை" படத்தின் ஃபர்ஸ்ட் லுக் வெளியானது. சூதுகவ்வும்பட இயக்குநர்நலன்குமாரசாமி, எங்கேயும் எப்போதும்சரவணன், மற்றும்கட்டப்பாவைகாணோம் பட இயக்குநர் மணி செய்யோன் ஆகிய மூவரிடமும் உதவி இயக்குநராக பணியாற்றிய ராகேஷ் N.S இப்படம் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார். சிறியவர் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் ரசிக்கும்படியான கமர்ஷியல் ஃபேமிலி எண்டர்டெயினராக இப்படம் உருவாகிறது. நகரம், கிராமம் என இரு இடங்களில் கதை நடப்பதாக, இப்படத்தின் திரைக்கதை அமைக்கப்பட்டுள்ளது. இப்படத்தின் படப்பிடிப்பு சென்னை மற்றும் சிவகங்கை கிராமப்பகுதிகளில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. அறிமுக இசையமைப்பாளர் ஶ்ரீ இசையில் இப்படத்தின் பாடல்களைக் கவிப்பேரரசு வைரமுத்து எழுதியுள்ளார். சமீபத்தில் தேசிய விருது வென்ற இசையமைப்பாளர் ஶ்ரீகாந்த் தேவா பின்னணி இசைஅமைத்துள்ளார். கதையின்நாயகனாகசிம்ஹாநடிக்க, நாயகியாகமிஷாரங்நடித்துள்ளார். இவர்களுடன் ரோகிணி, செந்தில், பிரபு, சந்தான பாரதி, செல் முருகன், சரத் ரவி தங்கதுரை, தீபக் ரமேஷ், மணிகண்ட பிரபு, சுப்பிரமணியம் சிவா, ஆகியோர் இணைந்து நடித்துள்ளனர். நடன இயக்குநர் பாபா பாஸ்கர் இப்படத்தில் முதன் முறையாக முழு நீளக் கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். தற்போது வெளியாகியுள்ள ஃபர்ஸ்ட் லுக், குடும்பத்துடன் அனைவரும் ரசித்துக் கொண்டாட, ஒரு கலக்கலான திரைப்படம் இதுவென்பதை உறுதி செய்வதாக உள்ளது. அசத்தலாக அமைந்துள்ள இந்த ஃபர்ஸ்ட் லுக்கை, ரசிகர்கள் பாராட்டிப் பகிர்ந்து வருகின்றனர். பெரிய பட்ஜெட்டில் பிரம்மாண்டமாக உருவாகும் இப்படத்தை *Mudhra's film factory* சார்பில் ரேஷ்மி மேனன்தயாரித்துள்ளார். படப்பிடிப்பு முடிவடைந்த நிலையில் படத்தின் போஸ்ட் புரடக்சன் பணிகள் தற்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது. படத்தின் டிரெய்லர், இசை வெளியீடு பற்றிய அறிவிப்புகள் விரைவில் அதிகாரப்பூர்வமாக வெளியாகும். தொழில் நுட்ப குழுவினர் எழுத்து இயக்கம் ராகேஷ் N.S தயாரிப்பு ரேஷ்மி மேனன் ஒளிப்பதிவு K.A.சக்திவேல் இசை ஶ்ரீ பின்னணி இசை ஶ்ரீகாந்த் தேவா பாடல்கள் கவிப்பேரரசு வைரமுத்து படத்தொகுப்பு பொன் கதிரேஷ் PK கூடுதல் திரைக்கதை சாய்ராம் விஷ்வா லைன் புரடியூசர் திலீப் குமார் நிர்வாக தயாரிப்பு R.P.பால கோபி கலை M.தேவேந்திரன் மக்கள் தொடர்பு சதீஷ் (AIM)

# ஜெயம் ரவி நடிக்கும் 'பிரதர்' திரைப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் வெளியீடு



ஸ்கிரீன்சீன்மீடியா என்டர்டைன்மென்ட் பிரைவேட் லிமிடெட் தயாரிப்பில் எம். ராஜேஷ் இயக்கத்தில் ஜெயம் ரவி நடிக்கும் 'பிரதர்' திரைப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் விநாயக சதுர்த்தியை முன்னிட்டு இன்று வெளியிடப்பட்டது. ஸ்கிரீன் சீன் மீடியா என்டர்டைன்மென்ட் பிரைவேட் லிமிடெட்டின் எட்டாவது தயாரிப்பான இத்திரைப்படம் அனைத்து தரப்பு ரசிகர்களும் கண்டு மகிழக்கூடிய வகையில் கலகலப்பான குடும்ப படமாக உருவாகி வருகிறது. 'பிரதர்' படத்தில் பிரியங்கா மோகன் நாயகியாக நடிக்க, நட்டி, பூமிகா, சரண்யா பொன்வண்ணன், விடிவி கணேஷ், சீதா, அச்யுத், 'கே ஜி எஃப்', 'புஷ்பா' புகழ் பிரபல தெலுங்கு நடிகர் ராவ் ரமேஷ் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர். 'பிரதர்' திரைப்படத்திற்காக 'ஒரு கல் ஒரு கண்ணாடி'க்குப் பிறகு இயக்குநர் ராஜேஷும் இசையமைப்பாளர் ஹாரிஸ் ஜெயராஜும் மீண்டும் இணைந்துள்ளதால் இதன் பாடல்கள் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. ஒளிப்பதிவை விவேகானந்த் சந்தோஷம் கையாளுகிறார். பிரபல ஒளிப்பதிவாளர் பி சி ஸ்ரீராம் உடன் பல்வேறு படங்களில் பணியாற்றிய இவர், தனுஷ் நடித்த 'மாறன்', ஜிவி பிரகாஷ் நடித்த 'செம' மற்றும் ஸ்கிரீன் சீன் மீடியா என்டர்டைன்மென்ட் பிரைவேட் லிமிடெட் தயாரிப்பில் ஜெயம் ரவி நடித்த 'அகிலன்' உள்ளிட்ட திரைப்படங்களுக்கு ஒளிப்பதிவு செய்தது குறிப்பிடத்தக்கது. 'பிரதர்' குறித்து பேசிய இயக்குநர் எம். ராஜேஷ், "ஆக்ஷன் ததும்பும் வித்தியாசமான திரைப்படங்களில் ஜெயம் ரவி தற்போது நடித்து முத்திரை பதித்து வந்தாலும் 'ஜெயம்', 'எம் குமரன் சன் ஆஃப் மகாலட்சுமி', 'சம்திங் சம்திங் உனக்கும் எனக்கும்', மற்றும் 'சந்தோஷ் சுப்பிரமணியம்' ஆகிய குடும்ப கதையம்சம் உள்ள திரைப்படங்கள் அவரது திரையுலக பயணத்தில் மிகவும் முக்கியமானவை. இந்த வரிசையில் 'பிரதர்' இணையும் என்பதில் சந்தேகம் இல்லை," என்றார். தொடர்ந்து பேசிய அவர், "சென்னை, ஹைதராபாத், ஊட்டி மற்றும் கொடைக்கானல் உள்ளிட்ட இடங்களில் இப்படத்தின் படப்பிடிப்பு நடைபெற்றுள்ளது. கலகலப்பான குடும்ப கதைக்கு நீண்ட இடைவெளிக்கு பிறகு ஜெயம் ரவி மீண்டும் திரும்பும் இத்திரைப்படம் 6 முதல் 60 வரை அனைத்து தரப்பு ரசிகர்களும் கொண்டாடும் வகையில் அமையும் என்று நம்புகிறோம்," என்று தெரிவித்தார். ஸ்கிரீன் சீன் மீடியா என்டர்டைன்மென்ட் பிரைவேட் லிமிடெட் தயாரிப்பில் எம். ராஜேஷ் இயக்கத்தில் ஜெயம் ரவி நடிக்கும் 'பிரதர்' திரைப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் இன்று வெளியிடப்பட்ட நிலையில் இப்படம் குறித்த மேலும் அதிகாரப்பூர்வ தகவல்கள் விரைவில் வெளியாகும்.

# மார்க் ஆண்டனி நான்கு நாள் வசூல் எவ்வளவு தெரியுமா?

ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் வெளியான திரைப்படம் 'மார்க் ஆண்டனி'. இப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

இயக்குனர் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் விஷால் நடித்துள்ள திரைப்படம் 'மார்க் ஆண்டனி'. இப்படத்தின் நாயகியாக ரித்து வர்மா நடித்துள்ளார். மேலும் எஸ்.ஜே.சூர்யா மற்றும் செல்வராகவன் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர். ஜி.வி பிரகாஷ் இசையமைத்துள்ள இந்த படம் செப்டம்பர் 15ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகி விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இந்நிலையில், 'மார்க் ஆண்டனி' திரைப்படத்தின் வசூல் குறித்த தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படம் வெளியான நான்கு நாட்களில் ரூ.50 கோடியே வசூல் செய்துள்ளதாக கூறப்படுகிறது.

# வேகப்பந்து வீச்சை பார்க்க மகிழ்ச்சியாக இருந்தது ரோகித் சர்மா



ஆசிய கோப்பை கிரிக்கெட்டின் இறுதிப்போட்டி நேற்று நடைபெற்றது. இதில் இந்தியா இலங்கை அணிகள் மோதின. இந்த போட்டியில் இந்திய அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆசிய கோப்பை கிரிக்கெட்டில் சாம்பியன் பட்டத்தை வென்ற பிறகு இந்திய கேப்டன் ரோகித் சர்மா கூறியதாவது: இது போன்று வேகப்பந்து வீச்சாளர்கள் சிறப்பாக பந்துவீசுவதை பார்க்கும் போது எனக்கு மிகவும் மனநிறைவை தருகிறது. எங்களிடம் உள்ள வேகப்பந்து வீச்சாளர்கள் வெவ்வேறு திறமையுடன் வித்தியாசமாக பந்து வீசக்கூடியவர்கள். ஸ்லிப்பில் நின்றபடி முகமது சிராஜ் பந்து வீசிய விதத்தை பார்க்க மகிழ்ச்சியாக இருந்தது. ஒட்டுமொத்தத்தில் இது ஒரு அற்புதமான செயல்பாடு. அதுவும் இறுதிப்போட்டியில் இது மாதிரி அசத்துவது நீண்ட காலம் மனதில் நிலைத்து நிற்கும். சுழற்பந்து வீச்சாளர் அக்ஷர் பட்டேலுக்கு லேசான தசைகிழிவு தான். ஒரு வாரம் அல்லது 10 நாட்களில் குணமடைந்து விடுவார் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் இரு ஆட்டங்களில் ஆடுவது சந்தேகம் தான். ஸ்ரேயாஸ் அய்யர் நன்றாக இருக்கிறார். பயிற்சியில் ஈடுபடுகிறார். கிட்டத்தட்ட அவர் 99 சதவீதம் உடல்தகுதியை எட்டிவிட்டார்' என்றார்.

# விராட் கோலி போல நடந்து காட்டிய இஷான் கிஷன் வீடியோ வைரல்



இந்திய அணி இலங்கையை 50 ரன்னில் சுருட்டியது. இந்திய அணி 8வது முறையாக ஆசிய கோப்பையை கைப்பற்றியது.

ஆசிய கோப்பை கிரிக்கெட்டில் இந்திய அணி இலங்கையை 50 ரன்னில் சுருட்டி சூப்பர் வெற்றியுடன்கோப்பையை 8வது முறையாக சொந்தமாக்கியது. ஆசிய கோப்பையை வென்ற மகிழ்ச்சியில் இந்திய வீரர்கள் பரிசு வழங்கும் நிகழ்ச்சிக்காக களத்தில் நின்று கொண்டு பேசி வந்தனர். அப்போது இஷான் கிஷன், விராட் கோலி போல நடந்து காட்டினார். அதை பார்த்த விராட் கோலி என்னை மாதிரி நடப்பதாக கூறி, பின்னாடி தூக்கி கொண்டு நடக்கிறாய் என கிண்டலாக அவரும் நடந்து காட்டினார். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் தற்போது வைரலாகி வருகிறது. சில தினங்களுக்கு முன்பு நேபாளம் அணிக்கு எதிரான போட்டியில் விராட் கோலி தண்ணீர் கொடுக்க வந்த வீடியோ ஒன்று வைரலாகி வந்த நிலையில் தற்போது இந்த வீடியோ வைரலாகி வருகிறது.

# 21 ரன்னுக்கு 6 விக்கெட் ஒரே போட்டியில் பல சாதனைகளை படைத்த சிராஜ்



இலங்கையின் பேட்டிங் முதுகெலும்பை சுக்குநூறாக்கிய இந்திய வேகப்பந்து வீச்சாளர் முகமது சிராஜ் 7 ஓவர்களில் ஒரு மெய்டனுடன் 21 ரன் மட்டுமே விட்டுக்கொடுத்து 6 விக்கெட்டுகளை அள்ளினார். அவரது சிறந்த பந்து வீச்சு இதுவாகும். அவர் இன்னிங்சில் 5 விக்கெட்டுக்கு மேல் வீழ்த்தியது இதுவே முதல் முறையாகும். மேலும் சில சாதனை விவரம் வருமாறு: ★ முகமது சிராஜியின் 21 ரன்னுக்கு 6 விக்கெட், ஒரு நாள் கிரிக்கெட்டில் இலங்கைக்கு எதிராக ஒரு பவுலரின் மிகச்சிறந்த பந்துவீச்சாக பதிவானது. இதற்கு முன்பு பாகிஸ்தானின் வாக்கர் யூனிஸ் 1990ம் ஆண்டு சார்ஜாவில் நடந்த இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் 26 ரன்னுக்கு 6 விக்கெட் சாய்த்ததே சிறந்த பந்து வீச்சாக இருந்தது. ★ அற்புதமாக பந்து வீசிய இந்திய பவுலர்களில் ஸ்டூவர்ட் பின்னி (4 ரன்னுக்கு 6 விக்கெட், வங்காளதேசம் எதிராக), அனில் கும்பிளே (126, வெஸ்ட் இண்டீஸ் எதிராக), பும்ரா (196, இங்கிலாந்துக்கு எதிராக) ஆகியோருக்கு அடுத்த இடத்தை முகமது சிராஜின் பந்து வீச்சு பிடித்துள்ளது. ★ முகமது சிராஜ் தனது 2வது ஓவரில் மட்டும் 4 விக்கெட்டுகளை வேட்டையாடினார். பந்து வாரியாக சாதனை விவரம் கணக்கிடப்பட்ட 2002ம் ஆண்டில் இருந்து ஒரே ஓவரில் 4 விக்கெட்டுகளை அறுவடை செய்த 4வது பவுலராக முகமது சிராஜ் திகழ்கிறார். ஏற்கனவே இலங்கையின் சமிந்தா வாஸ் (2003ம் ஆண்டு வங்காளதேசத்துக்கு எதிராக), பாகிஸ்தானின் முகமத் சமி (2003ம் ஆண்டு நியூசிலாந்துக்கு எதிராக), இங்கிலாந்தின் அடில் ரஷித் (2019ம் ஆண்டு வெஸ்ட் இண்டீசுக்கு எதிராக) ஆகியோர் ஒரே ஓவரில் 4 விக்கெட் வீழ்த்தி இருக்கிறார்கள். ★ 2008ம் ஆண்டு ஆசிய கோப்பை இறுதி ஆட்டத்தில் இந்தியாவுக்கு எதிராக இலங்கை சுழற்பந்து வீச்சாளர் அஜந்தா மென்டிஸ் 6 விக்கெட் வீழ்த்தினார். அதன் பிறகு ஆசிய கோப்பை இறுதி ஆட்டத்தில் 6 விக்கெட் எடுத்த வீரர் சிராஜ் தான். ★ இலங்கையின் 50 ரன், ஒரு நாள் போட்டி இறுதிப்போட்டிகளில் ஒரு அணியின் மோசமான ஸ்கோராக அமைந்துள்ளது. இதற்கு முன்பு 2000ம் ஆண்டு சார்ஜாவில் நடந்த சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட்டில் இலங்கைக்கு எதிரான இறுதிசுற்றில் இந்தியா 54 ரன்னில் ஆல்அவுட் ஆகி இருந்ததே இந்த வகையில் சொதப்பல் ஸ்கோராக இருந்தது. ★ இந்தியாவுக்கு எதிராக ஒரு அணியின் குறைந்த ஸ்கோரும் இது தான். 2014ம் ஆண்டு மிர்புரில் நடந்த ஆட்டத்தில் வங்காளதேசம் 58 ரன்னில் அடங்கியதே முந்தைய தாழ்ந்த ஸ்கோராகும்.

# ஹாட்ரிக் விக்கெட் எடுக்க நினைத்து பல்பு வாங்கிய சிராஜ்.. சிரிப்பலையில் கில் கோலி.. வீடியோ

ஆசிய கோப்பை இறுதிப் போட்டியில் 10 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்திய இந்தியா 8வது முறையாக ஆசிய கோப்பையை வென்றுள்ளது. டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த இலங்கை முகமது சிராஜ் வீசிய அதிரடியான ஸ்விங் பந்துகளை கணிக்க முடியாமல் வெறும் 50 ரன்களுக்கு ஆல் அவுட்டாகி ஒருநாள் கிரிக்கெட்டில் இந்தியாவுக்கு எதிராக மிகவும் குறைந்தபட்ச ஸ்கோர் பதிவு செய்த அணி என்ற மோசமான உலக சாதனை படைத்தது. இப்போட்டியில் 4வது ஓவரை வீசிய முகமது சிராஜ் முதல் பந்தில் நிசங்காவை அவுட்டாக்கி 3, 4 ஆகிய பந்துகளில் முறையே சமரவிக்ரமா மற்றும் அசலங்கா ஆகியோரையும் அவுட்டாக்கினார். அதனால் ஹாட்ரிக் எடுப்பதற்கு வாய்ப்பை பெற்றார். அதனால் அவரே பீல்டிங்கை தெர்வு செய்தார். மிட் ஆன் திசையில் யாருமே பில்டிங் விடவில்லை. சிலிப்பில் 4 பேர் நின்றனர். ஹாட்ரிக் வாய்ப்புக்கான பந்தை சிறப்பாக வீசியும் டீ சில்வா மிட் ஆன் திசையில் பவுண்டரி அடித்தார். இருப்பினும் அதை பவுண்டரிக்கு விடக்கூடாது என்ற நோக்கத்தில் வேகமாக ஓடி துரத்திய முகமது சிராஜ் முடிந்தளவுக்கு போராடியும் தடுக்க முடியவில்லை. அதை ஸ்லிப் பகுதியில் நின்று கொண்டு பார்த்த விராட் கோலி மற்றும் சுப்மன் கில் ஆகியோர் வாய் மீது கை வைத்து சிரித்தார்கள். குறிப்பாக ஏற்கனவே 8/4 என இலங்கை சரிந்தும் அந்த பவுண்டரி போனால் போகட்டும் என்று விடாமல் வெறித்தனமாக சிராஜ் துரத்தியதை நினைத்து விராட் கோலி வெளிப்படையாகவே சிரித்தார். இருப்பினும் தம்முடைய ஓவரில் ஒரு ரன் கூட எக்ஸ்ட்ரா கொடுக்கக் கூடாது என்ற நோக்கத்தில் வேகமாக துரத்திய சிராஜ் நிறைய முன்னாள் வீரர்கள் மற்றும் ரசிகர்களிடம் சமூக வலைதளங்களில் பாராட்டுகளையும் பெற்றார். அத்துடன் அடுத்த பந்திலேயே டீ சில்வாவை அவுட்டாக்கிய அவர் சர்வதேச கிரிக்கெட்டில் ஒரே ஓவரில் 4 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் இந்திய பவுலர் என்ற மாபெரும் சரித்திரம் படைத்து அதிவேகமாக 5 விக்கெட்டுகள் (16 பந்துகளில்) எடுத்த இந்திய பவுலர் என்ற சாதனையும் படைத்தது குறிப்பிடத்தக்கது.

# கரீபியன் பிரீமியர் லீக்: ஒரே ஓவரில் 32 ரன்கள் குவித்த சாய் ஹோப் வைரலாகும் வீடியோ



18 செப்டம்பர் 2023 2:32 PM அதிரடியாக விளையாடி சதம் அடித்த சாய் ஹோப் ஆட்டநாயகனாக தேர்வு செய்யப்பட்டார். சிபிஎல் தொடரில் தம்முடைய முதல் சதத்தை ஹோப் (41 பந்துகளில்) பதிவு செய்தார்.

வெஸ்ட் இண்டீசில் கரீபியன் பிரீமியர் லீக் 2023 தொடர் நடைபெற்று வருகிறது. இன்று நடைபெற்ற கடைசி லீக் போட்டியில் கயானா அமேசான் வாரியர்ஸ் மற்றும் பார்பிடாஸ் ராயல்ஸ் ஆகிய அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற பார்பர்டாஸ் அணி முதலில் பந்து வீசுவதாக அறிவித்தது. பிளே ஆஃப் சுற்றுக்கு 4வது அணியாக தகுதி பெறுவதற்கு இந்த போட்டியில் நிச்சயம் வென்றாக வேண்டிய கட்டாயத்தில் இரு அணிகளும் களமிறங்கின. முதலில் பேட்டிங் செய்த கயனா அணி 20 ஓவர் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 226 ரன்கள் எடுத்தது.

அதிகப்பட்சமாக சாய் கோப் 106 ரன்கள் குவித்தார். 227 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பார்பர்டாஸ் அணி 20 ஓவர் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 138 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதனால் 88 ரன்கள் வித்தியாசத்தில் கயானா அணி வெற்றி பெற்று பிளே ஆப் சுற்றுக்கு தகுதி பெற்றது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.